1974 மார்ச் 28]

சிகிச்சை கிடைக்க வாய்ப்பு இருக்கிறதே தவிர தனித்தனி பகுதியாக ஏற் படுத்துவது இயலாத காரியம். எக்ஸ்ரே யூனிட் அமைப்பதைப் பொறுத்து 24 படுக்கைகள் கொண்ட தாலுக்கா மருத்துவ மனைகளில் படிப்படியாக கொண்டுவரப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : இந்த மருத்துவமனை நெடுங்காலமாக இருந்து வருவது—படுக்கைகள் 26—இடவசதி போதாது. எனவே குறைந்தபட்சம் இடத்தை விரிவுபடுத்தவும், இந்த எக்ஸ்ரே கருவியை அமைக்கவாவது அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதைத்தான் நான் தெரிவித்தேன். 24 படுக்கைகளுக்கு மேற்பட்ட தாலுக்கா மருத்துவ மனையில் இடவசதியை ஏற்படுத்த வேண்டும், பின்னர் ஒவ்வொன்றுக்காக எக்ஸ்ரே கருவிக்கு ஆர்டர் செய்து, அதை அமைக்க கட்டிடம் கட்டி, முறையாக படிப்படியாக அது அமைக்கப்பட இவை பரிசீலிக்கப்படும்.

மேட்டுப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம்

* 647 வினா.—திரு. சி. க. வடிவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், மேட்டுப்பாளையத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மேட்டுப்பாளையத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு அடையாள நன்கொடைத் தொகையாக ரூபாய் 10,000 கொடுத்து இருக்கிறார்கள். நிலம் வழங்குவதில் 3.16 ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டுள்ளன. ஐந்து ஏக்கர் நிலம் இருக்கவேண்டும் என்று விதி இருப்பதால், முழு அளவு நிலமும் கிடைத்த பின்னர், கட்டிடம் கட்டுவது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டி டத்தைக் கட்ட மொத்த மதிப்பு எவ்வளவு? அரசாங்கம் ஏதாவது உதவி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குடும்ப நல திட்டத்தின் கீழ் கட்டிடம் கட்டுவதற்கு ஒரு லட்சத்து பத்தாயிரம், ஒரு லட்சத்து இருபதாயிரம் ஆகிறது. ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு மருந்தகம், குடியிருப்

போடு ஒரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம், ஒரு லட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம் ஆகிறது. அதிலே 150 இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மருந்தகம், குடியிருப்போடு கட்ட வேண்டும் என்கிறபோது ஆண்டுக்குச் சில— அவர்கள் கொடுக்கிற இடம், பத்தாயிரம் கொண்டு மருந்தகத்தைக் கட்டுவது— ஆறு . படுக்கைகள் உள்ளதாக—என்று தீர்மானித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் செயல்படும்.

வடக்கலூர் அரிசனங்களிடமிருந்து முறையீடு

* 648 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அவினாசி வட்டம், வடக்கலூர் அரிசன மக்கள், அங்கு கட்டப்பட்டு வரும் பொது மண்டபம் (Community Centre) முடிக்கப் பெறாமல் இருப்பது குறித்தும், தங்களுக்குக் குடியிருப்புகள் ஒதுக்குவது குறித்தும், 12—8—1973-ல் மாண்புமிகு அமைச்சரிடம் விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

மீன் வளப் பயிற்சி.

* 649 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீன் வளத்தைப் பெருக்கவும், மீன் பிடிப்பதில் புதிய முறைகளை கண்டறியவும் 1973-ல் தமிழ்நாடு அரசின் சார்பில் நார்வே, சுவீடன் போன்ற நாடுகளுக்கு யாராவது அனுப்பப்பட்டார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. நா. வீராசாமி : நார்வேக்கும், சுவீடனுக்கும் மீனவர்களைச் சேர்ந்த மெம்பர்களை அனுப்பிக் கேர்ந்துவரக்கூடிய வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். இப்போது நம் நாட்டில் மீன் இலாக்கா திறமையாகச் செயல்பட்டு வருகிறது. அப்படி இருக்கும்போது சட்டசபையில் இருக்கக்கூடிய மெம்பர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதன் மூலம் இந்த நாட்டின் மீன் வளத்தைப் பெருக்க நம் அரசு முயற்சிக்குமா ?